மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்
2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16–ம் நாள் வியாழக்கிழமை
அ.வ.எண். 21/25
பி.சா.1

சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டின் ஆணையுறுதி சட்டத்தின் வகைமுறைகளின் கீழ் (44 வது சட்டம்) திரு.எம்.ஹரிராமகிருஷ்ணன்,M.A.,M.Phil.,L.L.M., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் ஆணையிட்டு உறுதிகூறி வைக்கப்படுகிறது.

---

| | |
|---|---|
| பெயர்:முருகேசன் | தேதி : 16.04.26 |
| வயது : | த/பெ :வெள்ளத்துரை |
| கிராமம் : | தொழில் : |
| | மாவட்டம்: |

---

**16.04.26 குறுக்கு விசாரணை**

1.நான் மேட்டுப்பாளையத்தில் சுமார் 40 வருடத்திற்கு மேல் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். என்னுடன் எனது சகோதரர் 2 ம் பிரதிவாதி ராமச்சந்திரன் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நாங்கள் இருவரும் ஒரே வீட்டில் பெண் எடுத்துள்ளோம் என்றால் சரிதான். என் அத்தை வீட்டில் பெண் எடுத்துள்ளோம். 40 வருடம் மேட்டுப்பாளையத்தில் தொழில் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. 15 வருடம் என் சித்தப்பாவிடம் வேலை பார்த்து வந்தேன்.

2.என் சகோதரி அன்னப்பாக்கியம் மேட்டுப்பாளையத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். எனக்கும், சகோதரிக்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்றால் சரியல்ல. ஒற்றுமையாக தான் இருந்தோம். தபசில் சொத்தினை பாகப்பிரிவினை செய்ய அழைத்தது யார் என்றால் என் பெரியப்பாவின் பிள்ளைகள். என் பெரியப்பாவின் வாரிசுகளுக்கு 44 செண்டும், வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு 44 செண்டும் பாத்தியம் என்றால் சரிதான்.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 18:14:38 +0530

3.நான் தானசெட்டில் மெண்ட் ஆவணம் பிறப்பிக்கும்போது ரூபாய் 10 லட்சம் மற்றும் 10 பவுண் நகைகள் கொடுத்ததாக சொல்லியுள்ளதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஒற்றுமையாக இருந்ததால் ஆவணம் எழுதி வாங்கவில்லை. என் சகோதரி அன்னபாக்கியத்தை பாகப்பிரிவினை ஆவணம் எழுதுவதாக அழைத்து வந்துவிட்டு மோசடியாக செட்டில் மெண்ட் ஆவணம் பிறப்பித்துக்கொண்டுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 10 லட்சம் மற்றும் 10 பவுண் கொடுக்காததால் தான் அவ்வளவு பெரிய தொகைக்கு ஆவணம் எதுவும் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

4.என் சகோதரி தற்போது வரை ஏழ்மை நிலையில் சாப்பாட்டுக்கு கஷ்டப்பட்டு வருகிறார் என்றால் சரியல்ல. வாதிக்கு 4 வாரிசுகள் உள்ளனர் என்றால் சரிதான். வாதிக்கு 4 வாரிசுகள் உள்ள நிலையில் பரம்பரை சொத்தினை எனக்கு செட்டில் மெண்ட் செய்து கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மேட்டுப்பாளையத்தில் மீனாட்சி என்ற பகுதியில் எனக்கு காம்பளக்ஸ் உள்ளது என்றால் சரியல்ல. பக்கத்து பகுதியில் உள்ளது. நான் அதனை பல்வேறு நிறுவனங்களுக்கு வாடகைக்கு கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

5.நல்லிதோப்பு பகுதியில் 2.5 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் 1 ஏக்கர் 1 செண்ட் இருந்தது. அதனை விற்று 7 வருடம் ஆகிவிட்டது. விஜிபுதூரில் எனக்கு ரெஸ்டாரண்ட் உள்ளது என்றால் சரியல்ல. என் தகப்பனாருக்கு

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 18:14:41 +0530

நட்டாத்தி கிராமத்தில் இன்னும் பல சொத்துக்கள் உள்ளது என்றால் 2 சொத்துக்கள் உள்ளன. என்ன என்ன சொத்துக்கள் என்றால் 60 வருடத்திற்கு முன்பு கட்டிய வீடு மற்றும் 10 மரக்கால் விதைப்பாடு வயலும் உள்ளது. எதிர்வழக்குரையில் என் அப்பாவுக்கு பல சொத்துக்கள் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் அது சரியல்ல.

6.தபசில் சொத்தின் தற்போதைய சந்தை மதிப்பு 50 லட்சம் என்றால் சரியல்ல. தபசில் சொத்தின் சந்தை மதிப்பு அதிகம் என்பதால் என் சகோதரி எனக்கு தான செட்டில் மெண்ட் செய்து கொடுக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வாதி கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. தாவா வழக்கு அனுமதிக்கத்தக்கது என்றால் சரியல்ல.

என்னால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

HARIRAMAKRISHNAN Digitally signed by HARIRAMAKRISHNAN Date: 2026.04.16 18:14:44 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி ,
ஸ்ரீவைகுண்டம்.